# போருக்குப் பின்னரான மாணவர் இடைவிலகலும், கல்விப் பின்னடைவும்

**Soba Balasundaram**
Department of Education and Childcare
Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka

## ஆய்வுச் சுருக்கம்

ஒரு நாட்டினை மீள் உருவாக்கம் செய்வதில் கல்வியின் பங்களிப்பு இன்றியமையாததாகும். இதற்கு இடைவிலகல் பெரும் சவாலாக அமைந்துள்ளது. தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த யுத்தமானது இப்பிரதேச கல்வியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் மாணவர் இடைவிலகும் வீதம் அதிகமாக உள்ளதோடு, கல்வியில் பின்தங்கியவர்களாகவும் உள்ளதனால் அறிவுப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவே உள்ளனர். அதனடிப்படையில் போருக்குப் பின்னரான மாணவர் இடைவிலகலும், கல்விப் பின்னடைவையும் இனங்காண்பதற்காகவே 30 வருட காலமாகப் போரினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்குக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது போருக்குப் பின்னர் இடைவிலகியுள்ள மாணவர்கள் இடைவிலகியமைக்கான காரணங்கள், போருக்குப் பின்னர் மாணவர்கள் கல்வி நிலையில் பின்தங்கியவர்களாக உள்ளமைக்கான காரணங்கள், இதனால் இவர்கள் சமூகத்தில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், பெற்றோர் போன்றோரின் பங்களிப்புக்கள், மாணவர்களது தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பின்பற்ற வேண்டிய வகிபங்குகளை மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை எடுத்துரைப்பதாகவும், மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தி அவர்களுக்கு உதவும் வகையிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வு அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டதோடு இப்பிரதேசத்திலுள்ள 27 பாடசாலைகளில் 12 பாடசாலைகள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக் கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தரவுகளானது Microsoft Excel மற்றும் SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு போருக்குப் பின்னரான மாணவர் இடைவிலகலையும், கல்விப் பின்னடைவையும் அறிந்து கொண்டதோடு, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் கல்வி உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சார்பாக தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வானது பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி மீது அக்கறையுடன் செயற்படவும், பாடசாலையில் சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் வழியமைத்துக் கொடுத்துள்ளது. இதன் மூலம் அனைத்துப் பிள்ளைகளும் கல்வியைப் பெற்று நாட்டினை அறிவு பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கையும், எதிர்பார்ப்புமாகும்.

**கலைச் சொற்கள்:** மாணவர் இடைவிலகல், கல்விப் பின்னடைவு, அறிவுப் பொருளாதாரம்.